கடற்கரை கவியரங்கு – 606 நாள் 03-102021

# கவிதையுள்ளம் வாழ்க!

காணும் காட்சியிலும், கற்பனைத் தேடலிலும்;
வீணாய்க் கழிக்கின்ற, விருப்பமில்லாச் சூழலிலும்;
தானாய் எழுவதுவே சிந்தனையில் அறைகூவல்!
மீனாய்த் துள்ளிவரும்; மெல்லிய கதைகள் தரும்!

கானா அமுதமென கட்டறுந்தும் ஓடிவரும்!
ஆனால் பலருமதை அறியாது விட்டிடுவர்!
தேனாய் இனிப்பதுவாய், தெள்ளுதமிழதுவாய்;
கோனாகி நெஞ்சத்துள் கூத்தாடும் பொருளாகி,

வானாளும் கதிரெனவாய், வார்க்கும் சொற்சிலம்பம்!
மீனாய் விண்ணகத்துப் நறும் பூவாய்க்
காணேமோ அதனை கவிதை யென்போமோ!
தேனார்ச் செந்தமிழமுதைத் திகட்டாமால் செய்யும்,

தெள்ளு தமிழ்க் கவியோ திரண்டபலமொழியில்,
துள்ளும் சொற்சிலம்பம் சொன்னவர் கவிஞராமே!
கள்ளமில் அறிவின் கூட்டம் காலக் கண்ணாடி!
வள்ளுவனோ ஷெல்லியோ வான்புகழில் யாரோ!

தள்ளாது வாழ்வியலைத் தரணிக்குச் சொன்னவரே!
அள்ளக் குறையாத அமுதம் கவிதை யுள்ளம்!
வெள்ளம் பாய்ந்தாலும் வேதனைத் துளைத்தாலும்,
பள்ளம்சேர் நீரைப் போல் பக்குவமாய்ச் செய்திடுவர்!

உள்ளத்துவப்பதுவை உறுபொருளாக்கி வைத்து,
வள்ளலாய் சொல்லடுக்கி வரிகளிலே ஆறுதலாய்,
துள்ளுவதாய் மனத்தூய்மை காலமெலாம் செய்துவரும்
கள்ளமில் கவிஞர் குலம் நிறைந்து வாழியவே!

- **கவிவளவன்** ஆகிய **கு.ப.அசோகன்**
03-10-2021